

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 72

28.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற உதவி பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.ஜெயக்குமார், தன்னுடைய வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வேண்டி, மண்டலம் - 3, பிரிவு - 29, சென்னை மெட்ரோ குடீநீர் வடிகால் வாரியம், பொன்னியம்மன்மேடு, சென்னையில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து குடிநீர் இணைப்பு வழங்க திரு.முருகன், உதவி பொறியாளர், மண்டலம் - 3, பிரிவு - 29, சென்னை மெட்ரோ குடீநீர் வடிகால் வாரியம், அவர்கள் தனக்கு ரூ.6,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 28.08.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.முருகன், உதவி பொறியாளர், அவர்கள் ரூ. 6,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 72
28.08.2026

ASSISTANT ENGINEER, ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Jayakumar, had applied for metro water connection to his residence at Zone -3, Division -29, CMWSSB, Ponnianmmanmedu, Chennai. Tr.Murugan, Assistant Engineer, Zone -3, Division -29, CMWSSB, demanded Rs.6,000/- as bribe for processing his application. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Chennai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (28.08.2026). During trap proceedings, Tr.Murugan, Assistant Engineer received the bribe amount of Rs.6,000/- from the complainant. The accused was arrested and remanded.